போக்குவரத்து துறை

அனுப்புநர்
செ.சிவக்குமார்,
வட்டார போக்குரவத்து அலுவலர்,
திண்டிவனம்.

பெறுநர்
போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையாளர்,
போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை-5.

ந.க.எண்.இ2/13226/2020 நாள். 10.05.2022

அய்யா,

| | |
|---|---|
| பொருள்: | போக்குவரத்து துறை - மோட்டார் வாகனம் - வட்டார போக்குவரத்து அலுவலகம், திண்டிவனம் - சிறைபிடிக்கப்பட்ட வாகனங்கள் - 90 நாட்களுக்கு மேலாகியும் வாகனத்தினை விடுவித்துக்கொள்ள வாகன உரிமையாளர்கள் முன்வராதது - வாகனத்தை ஏலத்தில்விட்டு அரசுகணக்கில் உரிய தொகையை சேர்த்தல் - வாகனத்தின் விலை மதிப்பு நிர்ணயம் செய்ய குழு அமைக்கப்பட்டு, விலை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டது - தொடர்பாக. |
| பார்வை: | 1. போக்குவரத்து ஆணையர், சென்னை-5 அவர்களின் சுற்றறிக்கை எண்.7/2002.<br>2. மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 மற்றும் 2, வட்டார போக்குவரத்து அலுவலகம், திண்டிவனம், அவர்களின் சோதனை அறிக்கைகள்.<br>3. இவ்வலுவலக குறிப்பாணை வாகன உரிமையாளர் மற்றும் நிதியாளருக்கு அனுப்பப்பட்ட நாள் 20.07.2021<br>4. தமிழ்நாடு மோட்டார் வாகனச் சட்டம் வாகன விதி 137 (b)-ன்படி சார்வு செய்யப்பட்ட நாள் 27.01.2022<br>5. துணை போக்குவரத்து ஆணையர், விழுப்புரம் அவர்களின் உத்தரவு நாள்.4.02.2022.<br>6. மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை நாள்.17.03.2022. |

*******

பார்வை 2ல் காணும் சோதனை அறிக்கையின்படி, திண்டிவனம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் சிறைபிடிக்கப்பட்டு நீண்டநாட்களாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களின் உரிமையாளர்களால், அரசுக்கு செலுத்தவேண்டிய வரி மற்றும் இணக்க கட்டணம் செலுத்தி நாளது தேதிவரை வாகனத்தை விடுவித்து செல்லாத காரணத்தினால் இணைப்பில் கண்டுள்ள வாகனப்பட்டியலின்படி 02.06.2022 அன்று முற்பகல் 11.00 மணிக்கு பொது ஏலம் விடப்பட உள்ளது. பொது ஏல அறிவிப்பு விவரம் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. அதனை போக்குவரத்து துறை இணையதளத்தில் பதிவேற்றம் செய்திடுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

வட்டார போக்குவரத்து அலுவலர்,
திண்டிவனம்

10/5/22

தமிழ்நாடு அரசு
போக்குவரத்து துறை
வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், திண்டிவனம்
"பொது ஏல அறிவிப்பு"

திண்டிவனம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் சிறைபிடிக்கப்பட்டு நீண்டநாட்களாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களின் உரிமையாளர்களால், அரசுக்கு செலுத்தவேண்டிய வரி மற்றும் இணக்க கட்டணம் செலுத்தி, நாளது தேதிவரை வாகனத்தை விடுவித்து செல்லாத காரணத்தினால், கீழ்கண்ட 4 ஆட்டோரிக்ஷா வாகனங்கள் 1 இருசக்கர வாகனம் மற்றும் 1 மேக்சிகேப் வாகனம் ஆக மொத்தம் 6 வாகனங்கள் 02.06.2022 அன்று முற்பகல் 11.00 மணிக்கு, திண்டிவனம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில், ஏல விலை நிர்ணய குழுவினரால், பொது ஏலத்தில் விட உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஏலம் விடப்படும் வாகனங்களின் பட்டியல் பின்வருமாறு. ஏலம் தொடர்பாக அனைத்து வாகனங்களையும் (AS IS WHERE IS CONDITION) அலுவலக வேலை நாட்களில், அலுவலக நேரத்தில் திண்டிவனம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் பார்வையிடலாம். ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் ஆதார் கார்டு, பான் கார்டு நகலுடன் பதிவுத் தொகை ரூ.100/- திண்டிவனம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் செலுத்தி, ஏலத்தில் கலந்து கொள்ளலாம். அவை திருப்பி அளிக்கப்படமாட்டாது.

பட்டியல்

| வ. எண். | வாகன எண் | வாகன வகை | தயாரிப்பு |
|---|---|---|---|
| 1 | PY01TS 3209 | MOTOR CYCLE | TVS APACHE |
| 2 | TN32Q 8452 | AUTO RICKSHAW | PIAGGIO |
| 3 | TN32T 9635 | AUTO RICKSHAW | PIAGGIO |
| 4 | TN32Q 7121 | AUTO RICKSHAW | PIAGGIO |
| 5 | TN32M 8286 | AUTO RICKSHAW | PIAGGIO |
| 6 | TN40 8348 | MAXI CAB | MAHINDRA |

மேற்கண்ட வாகனங்களை ஏலம் எடுத்தவர்கள், ஏலம் முடிந்த உடன் ஏலத்தொகையில் 25% முன்பணமாக செலுத்த வேண்டும். பின்னர் 7 தினங்களுக்குள் மீதி தொகையை செலுத்தி வாகனங்களை எடுத்துச் செல்ல வேண்டும். ஏலத்தொகையில் 18% விற்பனை வரியாக செலுத்த வேண்டும்.

10/05/2022

மதிப்பீட்டு குழு உறுப்பினர் (வாகன ஏலம்) மற்றும்
வட்டார போக்குவரத்து அலுவலர்,
திண்டிவனம்

10/5/22 10/5/2022